இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

நாம் கொண்டுள்ள நம்பிக்கையின் மூலம் கடவுளுக்கு ஏற்புடையவர்களாகியுள்ள நாம், நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வழியாய்க் கடவுளோடு நல்லுறவு கொண்டுள்ளோம். நாம் இப்போது அருள்நிலையைப் பெற்றிருக்கிறோம். இந்நிலையை அடையும் உரிமை இயேசு கிறிஸ்துமீது கொண்ட நம்பிக்கையால்தான் அவர் வழியாகவே நமக்குக் கிடைத்தது. கடவுளின் மாட்சியில் பங்கு பெறுவோம் என்னும் எதிர்நோக்கில் நாம் பெருமகிழ்வும் கொள்ள முடிகிறது. (உரோ 5:1-2)

# தீபகற்ப மலேசியா மறைமாவட்டங்களில் தேர்வுச் சடங்கு

ஒவ்வொரு ஆண்டும் தவக்காலத்தின் முதலாம் ஞாயிறன்று முதியோருக்கான புகுமுக அருட்சாதன கொண்டாட்டத்தின் இரண்டாம் சடங்கான தேர்வுச் சடங்கு மறைமாவட்டத்தின் ஆயர் அல்லது பேராயர் முன்னிலையில் நடைபெறவதுண்டு. அன்று தேர்வுச் செய்யப்பட்ட வேட்பாளர்கள் பதிவேட்டில் பெயர் பதிவு செய்யும் சடங்கும் நடைபெறும். அவ்வரிசையில் இவ்வாண்டு கடந்த பிப்ரவரி 26-ம் திகிதி பினாங்கு மறைமாவட்டம், கோலாலம்பூர் மாமறைமாவட்டம் மற்றும் மலாக்கா-ஜொகூர் மறைமாட்டம் ஆகியவற்றில் பெயர் பதிவு செய்யும் சடங்குகள் சிறப்பாக நடைபெற்றது. இச்சடங்கை தொடர்ந்து துப்புறவும் ஒளியும் பெறும் காலத்தில் வேட்பாளர்கள் பயணிப்பர். இக்காலத்தில் மனமாற்றம் உள்ளத்தூய்மை ஆகிய இரண்டிலும் கவனம் செலுத்தப்படும். இதற்கு வழிவகுக்கும் வகையில் மேலும், துப்புரவு பெற்று, கிறிஸ்துவின் மீட்பை அடைய விருப்பத்தைத் தூண்டி எழுப்ப மூன்று ஆய்வுகள் நடத்தப்படும். அத்தோடு விசுவாச அறிக்கையும் ஆண்டவர் கற்பித்த இறைவேண்டலும் அளிக்கப்படும்.

### மலாக்கா-ஜொகூர் மறைமாவட்டம்

மேற்கண்ட மறைமாவட்டத்திற்கான தேர்வுச் சடங்கு இரு பிரிவுகளில் கொண்டாடப்பட்டது. முதலில் கடந்த 25 பிப்ரவரி அன்று ஜொகூர் பாரு, புனித அமலோற்பவ அன்னை ஆலயத்தில், ஓய்வுப்பெற்ற ஆயர் மேதகு போல் தான் அவர்களின் தலைமையிலும், அடுத்த நாள் மலாக்கா புனித திரேசம்பாள் ஆலயத்தில் பேரருட்தந்தை (Msgr) பீட்டர் இங் அவர்களின் தலைமையிலும் கொண்டாடப்பட்டது. மலாக்கா-ஜொகூர் ஆயர் மேதகு பெனர்ட் போல் அவர்கள் தாய்லாந்தில் ஆசிய கண்டத்தின் ஒருங்கியக்க ஆயர் மாநாட்டு பேரவையில் (Asian Continental Assembly on Synodality) கலந்து



Msgr. பீட்டர் இங் பெயர் பதிவு நூலில் கையெழுத்திடுகிறார்

கொண்டிருந்ததால் இரு தேர்வுச்சடங்குகளுக்கும் தலைமையேற்க இயலவில்லை.

இரு இடங்களிலும் மலாக்கா ஜொகூர் மறைமாவட்ட மறைக்கல்வி பணிக்குழுவின் இயக்குனர் திருத்தொண்டர் ஷெர்மன் குயெக் சடங்குகள் நடைபெற உதவினார் என்பது குறிப்பிடத்தக்கது. 'அவர் நமது அறியணையைத் துறந்து,



பேராயர் ஜூலியல் பெயர் பதிவு நூலில் கையெழுத்திடுகிறார்

கடவுள் நம் வாழ்வின் ஆண்டவராக இருக்க வழிகாண வேண்டும்' என்ற நற்செய்தியின் அழைப்பை மையமாகக் கொண்டு சுருக்கமானதொரு மறையுரை வழங்கினார். இவ்வாண்டு இம்மறைமாவட்டத்தில் 202 வேட்பாளர்கள் இத்தேர்வுச் சடங்கில் பங்கேற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### காஜாங்: கோலாலம்பூர் மாமறைமாவட்டம்

வழக்கம்போல் இவ்வாண்டும் தேர்வுச் சடங்கானது காஜாங், திருக்குடும்ப ஆலயத்தில் பேராயர் ஜூலியன் லியாவ் அவர்களின் தலைமையில் கொண்டாடப்



ஞான பெற்றோர் வேட்பாளர்களுக்கு ஆதரவு தெரிவிக்கின்றனர்

பட்டது. 34 பங்குகளிலிருந்து அருள்பணியாளர்கள், ஆர்.சி.ஐ.ஏ. பணிக்குழுவினர் மற்றும் ஞானபெற்றோர்கள் என திரளாக இறைமக்கள் வருகைத்தந்திருந்தனர். வேட்பாளர்களின் மொத்த எண்ணிக்கை 463 என அறிவிக்கப்பட்டது. கடந்த பெருந்தொற்று காலத்தில் இரு ஆண்டுகளாக, இத்தேர்வுச் சடங்கானது மறைவட்ட அளவில் கொண்டாடப்பட்டது பலருக்கு நினைவிருக்கலாம்.

கத்தோலிக்க திருஅவையில் உறுப்பியம் பெற முற்பட்டவர்கள் பெருந்தொற்று காலத்தில் நிலவிய நடமாட்டக் கட்டுப்பாடு காரணமாக ஒருபோதும் குழப்பத்தில் விடப்படாமல் இருப்பதை உறுதி செய்வதில் RCIA பணிக்குழுவினர் மற்றும் அவர்களின் ஆதரவாளர்கள் மேற்கொண்ட இடைவிடாத பணிக்காக பேராயர் ஜூலியன் அவரது மறையுரையில் நன்றி கூறினார்.

தொடர்ந்து, பேராயர் இந்த முதியோருக்கான புகுமுக அருட்சாதன தயாரிப்பு சடங்குமுறையானது திருவிவிலித்தை அடிப்படையாகக் கொண்டது என்று `நான் உங்களுக்குக் கடவுளாய் இருப்பேன். நீங்கள் எனக்கு மக்களாக இருப்பீர்கள்' (எரே7:23) எனும் இறைவார்த்தை வசனத்தை மேற்கோள்காட்டினார்

ஒவ்வொரு பங்கு பிரதிநிதியும் அவரது பங்குத்தந்தையுடன் முன்வந்து பேரயரிடம் பெயர் பதிவு புத்தகத்தை அளிக்க, பேராயர் பரிசோதித்து தேர்வுசெய்யப்பட்டோரை உறுதிப்படுத்தினார். இவ்வருடம் 464 வேட்பாளர்கள் புகுமுக அருட்சாதனங்களுக்கும், 171 பேர் உறுதிபூசுதல் அருட்சாதனத்திற்கும் மேலும் 81 பேர் மீண்டும் கத்தோலிக்க திருஅவையில் உறுப்பியம் பெறுவதற்கும் தயாரிக்கப்பட்டிருந்தனர் என்று அறிவிக்கப்பட்டது.

### பினாங்கு மறைமாவட்டம்- பேராக் மறைவட்டம்

பினாங்கு மறைமாவட்டத்திற்கான தேர்வுச் சடங்கு, பினாங்கிலும் ஈப்போவிலுமாக இரு தேவாலயங்களில் கொண்டாடப்பட்டது. கடந்த பிப்ரவரி 26-ம் திகதி, மேற்கண்ட சடங்குமுறை ஈப்போவிலுள்ள புனித லூர்து அன்னை பங்கு ஆலயத்தில் ஆயர் மேதகு செப்ஸ்தியன் பிரான்சிஸ் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இக்கொண்டாட்டத்தில் அருள்பணியாளர்கள் ரோபர்ட் டேனியல், பிரான்சிஸ் என்ரூ, ஸ்டீபன் லியூ, டேவிட் லூர்ட்ஸ் மற்றும் பெட்ரிக் மாசாங் CSsR ஆகியோர் ஆயருடன் இணைந்துகொண்டனர்.

இவ்வாண்டுக்கான 66 வேட்பாளர்களின் பெயர்களைக் கொண்ட பெயர் பதிவு புத்தகம் ஆயரிடம் ஒப்படைக்கப்பட்டது. இதன்வழி கடவுளால் தேர்வுச்செய்யப்பட்டோர் பட்டியலில் இவர்களின் பெயர்களும் இடம் பெறலாயிற்று.

ஆயர் அவரது மறையுரையில், இந்த 2023-ம் ஆண்டுக்கான தவக்காலத்தில் உங்களோடு ஒருங்கிணைந்த பயணத்தைத் தொடர்வதில் மகிழ்கிறேன் என்று கூறியதோடு, இக்காலத்தில் கத்தோலிக்க மரபின்படி தர்மம், இறைவேண்டல் மற்றும் நோன்பு ஆகியவற்றில் கவனம் செலுத்த அழைக்கிறது என்றார். இவற்றோடு நான் 'பெற்றுக்கொள்ளுங்கள்' என்று இன்னொரு பண்பை இணைத்துக்கொள்ள அழைக்கிறேன். ஆகவே, தர்மம், இறைவேண்டல்,



பினாங்கு, தூய ஆவியார் பேராலயத்தில்..

நோன்பு மற்றும் பெற்றுக்கொள்ளுதல்' இவை இக்காலத்திற்கு இன்றியமையாதவை என்றார். அவர் தொடரந்து, இவ்வாண்டு பாஸ்கா திருவிழிப்பின் போது, இந்த ஒருங்கியக்கப் பயணமானது அதன் உச்சத்தை அடையும் என்றும், அன்றிரவு பினாங்கு மறைமாவட்டம் உள்ளடக்கிய கிளந்தான், கெடா, பெர்லிஸ், பேராக் மற்றும் பினாங்கு ஆகிய மாநிலங்களில் திருமுழுக்கு கொண்டாட்டம் சிறப்புறும் என்றார்.

பினாங்கு மாநிலப் பகுதிக்கான தேர்வுச் சடங்கு தூய ஆவியார் பேராலயத்தில் கடந்த 25 பிப்ரவரி அன்று கொண்டாடப்பட்டது. இக்கொண்டாட்டத்தில் பினாங்கு தீவு மற்றும் வடக்கு மறைவட்டம் ஆகிய பகுதிகளை உள்ளடக்கிந 12 பங்குகளில் இருந்து 128 வேட்பாளர்கள் கலந்து கொண்டனர். அருள்பணியாளர்கள் பங்குத்தந்தை ஜோக்கிம் ரோபர்ட், பிரான்சிஸ் அந்தோணி, எட்மண்ட் ஊண் , எஸ்மொண்ட் சுவா மற்றும் திருத்தொண்டர் டெஸ்மன் ஜென்சன் ஆகியோரும் இந்த பன்மொழி கொண்டாட்டத்தில் பங்குபெற்றனர்.

ஆயர் செபஸ்தியன் அவரது மறையுரையில், வேட்பாளர்களைப் பார்த்து, 'நீங்கள் திருஅவையின் மையமும் இயேசு கிறிஸ்துவின் இதயமுமாக உள்ளீர்கள்', உங்களில் நான் அக்களிக்கிறேன்'" என்றுரைத்தார்.

நிறைவாக, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் தவக்கால செய்தியில் காணப்படும் இரு கருத்துக்களை ஆயர் பகிர்ந்துகொண் டார். அவை:

1. எனது மகனுக்குச் செவிசாயுங்கள் – இயேசு கிறிஸ்து
2. எழுங்கள்- அஞ்ச வேண்டாம்

பங்குத்தந்தை ஜோக்கிம் ரோபர்ட் தேர்வுப் பெற்ற அனைவருக்கும் தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார். ஆயர் செபஸ்தியன் இறுதி ஆசீரை வழங்கியப்பின் தேநீர் உபசரிப்பு தோழமை நிகழ்வில் அனைவருடன் கலந்துகொண்டனர்.

*செய்தி தமிழாக்கம் : ஆர்.கே.*

# கோல்பீல்ஸ் தோட்ட சிற்றாலயம் பண்டார் ஸ்ரீ கோல்பீல்ஸ் பகுதியில் புதிய ஆலயமாக உருவாகிறது

**கோலசிலாங்கூர்:** ஏற்குறைய 50 ஆண்டுகளுக்கு முன்பு இங்குள்ள கோல்பீல்ஸ் தோட்டத்தில் கட்டப்பட்ட புனித அந்தோணியார் சிற்றாலயம், இப்பகுதியில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள பண்டார் ஸ்ரீ கோல்பீல்ஸ் எனும் இடத்தில் புதிய ஆலயமாக கட்டப்படவுள்ளது.




3.5 மில்லியன் அல்லது முப்பத்தைத்து இலட்சம் ரிங்கிட் செலவில் எழுப்பப்படும் இவ்வாலயம், பழைய ஆலயத்திற்கு மிக அருகில் உள்ளது என்பது குறிப்பிடத் தக்கது. கோலா-சிலாங்கூரில் அமைந்துள்ள பாலகன் இயேசு சிற்றாலயத்தின் திருவிழாவின் போது இச்சிற்றாலயத்தைப் பராமரித்து வரும் பெஸ்தாரிஜெயா புனித வனத்து சின்னப்பர் பங்கின் பங்குத்தந்தை ஜேம்ஸ் கேபரியேல் அவர்கள் இந்த அறிவிப்பை செய்தார். இந்த சிற்றாலயம் கடவுளின் தயவால் விரைவில் கட்டிமுடிக்கப்பட இறைவேண்டல் செய்யுமாறு அனைவரையும் கேட்டுக் கொண் டார்.

அன்று, கருத்துரைத்த திரு ஜஸ்தின் ஜோசப் என்பவர், வாரந்தோறும் ஏறக்குறைய 300 பேர் இச்சிற்றாலயத்தில் வழிபாட்டுக்கு ஒன்றுகூடுகிறார்கள் என்றும், சமீப காலமாக இப்பகுதியில் பல கத்தோலிக்க அன்னிய தொழிலாளர்கள் குடியேறியுள்ளதாகவும் தகவல் தெரிவித்தார்.

மேலும், தற்போதைய சிற்றாலயம் தோட்ட நிலத்தில் உள்ளதாகவும், இங்கு அடிக்கடி வெள்ளம் ஏற்படுத்துவதோடு தோட்ட நிர்வாகம் மேம்பாட்டு திட்டங்களுக்காக சிற்றாலயம் வீற்றிருக்கும் நிலத்தின் மீது உரிமை கோருவதாகவும் அவர் தெரிவித்தார்.

# தேடலில் ஒப்புரவாகும் மனிதம்
## (தவக்கால சிந்தனை)

விவிலியத்தில் நமக்கெல்லாம் நன்கு அறிமுகமான ஒரு நிகழ்வு இயேசுவை நேரில் பார்க்க ஆவல் கொண்ட சக்கேயுவின் நடவடிக்கை. அது ஒரு தேடலுக்கான முயற்சி என்று கூறலாம். சக்கேயு வாழ்வில் உண்மையான மகிழ்ச்சியை, வாழ்வுக்கான பொருளை தேடியதில் வெற்றி பெற்றார். முயற்சி திருவினையாக்கும் என்பர். சக்கேயுவின் வாழ்வில் அது முற்றிலும் உண்மையானது.

செல்வத்தையும் அதிகாரத்தையும் வாழ்வின் முற்பகுதியில் இரவும் பகலுமாகத் தேடியலைந்த சக்கேயு உண்மை மகிழ்ச்சியை பெறவுமில்லை, அனுபவிக்கவுமில்லை. எனவே, உண்மை மகிழ்ச்சிக்கான அவரது தேடல் தொடர்ந்தது.

விவிலியத்தில் புனித லூக்கா நற்செய்தியில் மட்டுமே (19:1-10) சக்கேயுவைப்பற்றிய குறிப்புகளை காண்கிறோம். சக்கேயு என்ற பெயருக்கு எபிரேயத்தில் 'தூய்மையானவன், நேர்மையானவன்' என்று பொருள். ஆனால் அவர் வாழ்ந்த வாழ்வுக்கும் பெயருக்கும் தொடர்பு இல்லை. மக்கள் அவரை ஒரு பாவியாகவும் அநியாயக்காரராகவும் பார்த்தார்கள் என்பது விவிலிய வெளிப்பாடு. இவர் பணக்காரர். வரிதண்டுவோருக்குத் தலைவர் (லூக்கா 19:2) இவர் எரிக்கோ நகரில் வாழ்ந்தபடியால், அங்கு வரிதண்டும் தொழிலில் அளவுக்கு மிஞ்சிய வருமானம் கொண்டவர். இதில் இவரோ, வரிதண்டுவோருக்குத் தலைவர் என்பதால் வருமானத்திற்கு மேல வருமானம் கிடைத்திருக்கும்,

இவர் பிறப்பால் குள்ளமானவர். யூதர்கள் மரபில் உடல் குறைபாடு உள்ளவர்கள் கடவுளின் தண்டனை பெற்றவர்கள் என்பது பரவலான நம்பிக்கை. ஏன், அது தீய ஆவியின் செயல்பாடாகவும் கருதப்பட்டது.

அவரில் காணப்பட்ட குறை உண்மையில் குள்ளம் அல்ல, அவரிடம் செல்வம் இருந்தது, அதிகாரம் இருந்தது, மேலதிகாரிகளோடு நல்ல தொடர்பும் இருந்தது. ஆனால். தனிப்பட்ட வாழ்வில் உண்மை மகிழ்ச்சியில்லை. மக்கள் மத்தியில் நன்மதிப்பில்லை. பொது மக்களின் வெறுப்பிற்கும், வசைமொழிக்கும் ஏளனத்திற்கும் ஆளாகியிருந்தார்.

இதனால் கசப்பான வாழ்வு வாழ்ந்துகொண்டிருந்தார். இதனால், அவரது மனம் ஒரு மாற்றத்தைத் தேடியது. இந்த தேடலின் போதுதான் இயேசுவைப் பற்றி கேள்விப்பட்டு தேடி போகிறார்.

உடல் குள்ளமும் மக்கள் கூட்டமும் இரு பெரும் தடைகளாக அவரைத் தடுத்தன. ஆனாலும் கடவுளின் மற்றொரு படைப்பான அத்திமரம் கைகொடுத்தது. மரத்தின் அருகில் வந்த இயேசு, அண்ணாந்து பார்த்து, 'சக்கேயுவே, விரைவாய் இறங்கி வாரும்' இன்று உமது வீட்டில் தங்க வேண்டும்' என்றார்.

நிம்மதி, மகிழ்ச்சி இவற்றுக்கான தேடலில் சக்கேயு வெற்றிபெற்றார். "ஆண்டவரே, என் உடைமைகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுத்துவிடுகிறேன்; எவர் மீதாவது பொய்க் குற்றம் சுமத்தி எதையாவது கவர்ந்திருந்தால் நான் அதை நான்கு மடங்காகத் திருப்பிக் கொடுத்துவிடுகிறேன்" என்று அவரிடம் கூறினார் . (லூக்கா 19:8) புதிய வாழ்வை எழுந்து நின்று எழுச்சியோடு தொடங்கினான்.

உண்மையான மகிழ்ச்சி செல்வம் சேர்ப்பதில் அல்ல. சக்கேயுவின் தேடல் இயேசுவைக் கண்டுகொள்ளச் செய்ததுடன், அவருக்கு மீட்பையும் பெற்றுத் தந்தது. சக்கேயுவும், அவரது தேடலில் மலர்ந்த சந்திப்பும் வாழ்க்கைக்கு ஒரு திருப்புமுனையாக அமைந்தது.

- தன்னிடம் தன் தேவைக்கு அதிகமாக உள்ளதையும் அதில் சில அல்லது பல தவறான வழியில் வந்தது என்பதையும் அவர் உணரத்தொடங்கினார். இயேசுவுடனான சந்திப்பு இதற்கு வழிவகுத்தது.
- தேடல் மனித வாழ்வின் இயங்கும் சக்தி. அதுவே நமது வாழ்வை அடுத்த நிலைக்கு உயர்த்தும்.
- தேடலில்தான் ஒப்புரவுக்கு வழிபிறக்கும்.
- சக்கேயுவின் தேடலை அறிந்த ஆண்டவர் அவரை அரவணைத்தார்.

நமது தேடலில்தான் மனமாற்றத்திற்கு வழிபிறக்கும். ஒப்புரவாகும் மனிதமும் மீட்பை வழங்கும் புனிதமும் தேடலின் பலன்கள். சீடத்துவத்தில் நமது தேடல் என்றும் தொடர வேண்டும்.

-ஆர்.கே.



## நீதி இல்லாத அமைதி உண்மையான அமைதி அல்ல-திருத்தந்தை

நீதி என்பது ஒரு கற்பனை அல்ல. கடவுளுக்கான ஒவ்வொரு கடமையையும் நேர்மையாகவும் உண்மையாகவும் நிறைவேற்றுவது என்றும் அவருடைய விருப்பத்தை நிறைவேற்றுவது என்றும் எடுத்துரைத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், நீதி, ஒவ்வொருவருக்கும் தகுதியானதை வழங்கும் நல்லொழுக்கம் என்றும், பொதுவான வாழ்க்கையின் ஒவ்வொரு நிலை செயல்பாட்டிற்கு அனைவருக்கும் இன்றியமையாதது என்றும் வலியுறுத்தியுள்ளார்.

# வாழ்வளிக்கும் தண்ணீர் நமது தேடல்!

தவக்காலத்தின் மூன்றாம் ஞாயிறு நமக்கு ஆன்ம தாகத்தைத் தணிக்கும் வழியைக் கற்றுத் தருகிறது. இன்றைய முதல் வாசகத்தில் பாலைநிலத்தில் நாற்பது நாட்கள் பயணம் செய்த இஸ்ரேயல் மக்கள் தண்ணீரின்றி தவித்தனர். இறைவனை முழுமையாக உணராத மக்களாக, அவரை சோதித்தவர்களாக குடிக்க எங்களுக்குத் தண்ணீர் வேண்டும் என அவருக்கு எதிராக முறுமுறுத்தனர்.

ஆண்டவரின் வல்லமையில் ஆற்றலில் நம்பிக்கை கொள்ளாத நிலையில் இருந்த அவர்கள் கண் முன்பாக பாறையிலிருந்து தண்ணீர் புறப்பட செய்தார் இறைவன். தண்ணீர் மட்டும் அல்ல வாழ்வும் அவர்களுக்கு வழங்கப்பட்டது. மாசா என்ற இடத்தில் மெரிபாவின் ஊற்றடியில் இஸ்ரேயல் மக்கள் தாகத்தைத் தணித்துக் கொள்கின்றனர். மூன்றாம் உலகப் போர் என்று ஒன்று வந்தால் அது தண்ணீர் தட்டுப்பாட்டால் தான் வரும் என்பது ஆய்வு. நீரின்றி அமையாது உலகம் என்பதும் நாம் நன்கு அறிந்ததே. தண்ணீர் உயிர் கொடுக்கிறது, வாழ்விக்கிறது, செழுமையைத் தருகிறது. "இயேசுவே உயிருள்ள நிலையான ஊற்று" ( தி.பா 36:9)

இருளிலிருந்து ஒளிக்குள் கடந்து சென்ற ஒரு பெண்மணியைப் பற்றி இன்றைய நற்செய்தியில் வாசிக்கின்றோம். அசீரியப் படையெடுப்பின் விளைவாக யூதர்களின் ஒரு பகுதியினர் கலப்புத் திருமணம் செய்த காரணத்தால் அவர்கள் தூய்மையற்றவர்கள் என்றும் அவர்களைச் சமாரியர்கள் என்றும் மற்ற யூதர்கள் அழைத்தனர். இப்படிப்பட்ட யூத சமாரியர் பகைமை கொண்டிருந்த தருணத்தில் இயேசு ஒரு சமாரியப் பெண்ணை ஆன்மீக வழியில் பல நிலைகளைக் கடந்து பயணம் செய்ய வைக்கிறார்.

சமாரியப் பெண் தனது பாவ வாழ்க்கையால், சமுதாய பாகுபாடுகளால் ஒதுக்கப்பட்டவள். இயேசுவைச் சந்திப்பதற்கு முன் தூய்மையை, உண்மையை, முடிவில்லா வாழ்வை அறிந்து கொள்ளவில்லை. தண்ணீர் மொள்ள வந்தவளின் வாழ்வின் அவல நிலையைக் கண்டு அவளது வாழ்வுக்குள் புகுகிறார் இயேசு.

"குடிக்க எனக்குத் தண்ணீர் கொடும்" என்று கேட்டு அவளோடு உரையாடி அவள் உள்ளத்தை ஊடுருவி, "நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கும் எவருக்கும் என்றுமே தாகம் எடுக்காது. நான் கொடுக்கும் தண்ணீர் அதைக் குடிப்பவருக்குள் பொங்கி எழும் ஊற்றாக மாறி 'நிலைவாழ்வு' அளிக்கும்" என்கிறார். கொஞ்சம் கொஞ்சமாக இயேசுவைப் புரிந்து கொண்டவள் அவரை மீட்பராக, மெசியாவாக பார்க்கிறாள். தான் பெற்ற அனுபவத்தைப் புதிய வாழ்வைப் பிறருக்கு உடனே அறிவிக்க செல்கிறாள்.

அவளுடைய எண்ணத்தில் மாற்றம், உள்ளத்தில் மாற்றம், செயலில் மாற்றம், சாதாரண தண்ணீர் எடுக்க வந்தவள் உயர்வான நிலையைத் தாகம் எடுக்காத தண்ணீர் நிலையை அடைகிறாள். இயேசு இன்றி எவராலும் மீட்பு இல்லை என்பதைப் புரிந்து கொள்கிறாள். அவ்வண்ணமே இயேசுவை அறிவிக்கும் தூதுவராக மாறுகின்றாள்.

ஆகையால், நாம் வாழ்வு தரும் தண்ணீராம் நிலைவாழ்வை அளிக்கும் இயேசுவிடம் ஆழமான நம்பிக்கை கொண்டு வாழ்வோம். அதன்வழியாக இறையருளை நிறைவாகப் பெறுவோம்.

-சவரிநாதன், சுங்கை பட்டாணி

### தவக்காலத்தின் மூன்றாம் ஞாயிறு

| | |
|---|---|
| 1-ம் வாசகம் | வி.ப 17: 3-7 |
| தி. பாடல்119: | 95: 1-2. 6-7a. 7b-9 2-ம் |
| வாசகம்: | உரோ 5: 1-2, 5-8 |
| நற்செய்தி: | யோவான் 4: 5-42 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 1**
**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 1**
**திருப்புகழ் மாலை- வாரம் 3**